**OS. 139/2024**

**நாள். 30.10.2025**

**வா.சா.1 – சரஸ்வதி**

3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

தாவா சொத்துக்கள் செல்லச்சாமி என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். தற்போது செல்லச்சாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். செல்லச்சாமியின் மனைவியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். செல்லச்சாமிக்கு நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும், இறந்துபோன நடராஜனின் வாரிசுகளும் வாரிசுகள் என்றால் சரிதான். நடராஜனின் மனைவி 4 ம் பிரதிவரி சிவசக்தி என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் 4 ம் பிரதிவாதியின் மக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு 1/5 பாகம் பாத்தியம் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தலா 1/5 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். அதேபோல் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் 1/5 பங்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இதுவரை பிரிக்கப்படாமல் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் எனக்குரிய பாகத்தை கேட்டு பேச்சு வார்த்தை செய்தேன் என்றால் சரிதான். சொத்தை பிரித்துத்தரவில்லை என்பதால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 3 ம்பிரதிவாதி நாகரெத்தினம் நான் பாகம் கேட்டபோது ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான்.

1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–

என் தம்பி நாகரெத்தினம் சொன்ன விவரங்களைத்தான் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பு பல நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக நான்வேறு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு கையெழுத்து செய்து கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதி இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால்

தெரியாது. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்து ஆஜராகவில்லையா என்றால் இல்லை. தாவா வழக்கில் நான் வழக்கறிஞர் என் சார்பாக ஆஜர் ஆவதற்கு வக்காலத்தில் கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த வக்காலத்து தாவா வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து. அந்த கையெழுத்து மட்டும் **பி.வா.சா.ஆ.1**. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் இல்லை. இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் தம்பி நடராஜன் அவரது மனைவி சிவசக்தியை பவர் ஏஜெண்டாக நியமித்து பாகம் கேட்டு அசல் வழக்கு எண்.15/2015 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியாது. அந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் ஹரிகரன் மூலம் வக்காலத்து தாக்கல் செய்து எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு விவரங்கள் அனைத்தும் எனக்குதெரியும் என்றும், 3ம் பிரதிவாதி நாகரெத்தினத்திற்காக தற்போது ஆஜராகவில்லை, ஆட்சேபனை செய்யவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமாகி விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரியல்ல, ஆனால் விவாகரத்து வழக்கு நடந்தது. விவாகரத்து கேட்டு நான் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல, ஜீவானம்சம் கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்குரையில் என்னுடைய விலாசமாக காட்டப்பட்டுள்ள கதவு எண்.1/184-32 என்ற வீட்டில் எனக்குரிய பாகத்தை பொறுத்து 3ம் பிரதிவாதி நாகரெத்தினத்திற்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். கதவு எண்.1/184-32 என்ற சொத்தை 2ம்பிரதிவாதி துரைராஜ் எனக்கு இனாமாக எழுதிக்கொடுத்த சொத்து என்றால் சரிதான். அந்த வீடு சர்வே எண்.25/2சி-ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் கதவு எண்.1/184-32 வீட்டை

ஞானசௌந்தரி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. கிரையத்திற்கு பின்பு அந்த வீடு அமைந்துள்ள இடம் சர்வே எண்.22/2 சி1 என உட்பிரிவாகிவிட்டது என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி துரைராஜ் எனக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில் மென்ட் ஆவணத்தில் 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்துக்களை பாகம் செய்து கொள்வது சம்மந்தமாக நான், என் அம்மா, சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து 20.06.1997 தேதியில் ஒருபாகஉடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் தெரியாது. 20.06.1997 தேதியில் ஒருபாகஉடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு என் தாயார் உட்பட அனைவருக்கும் 1/6 பாகம் ஒதுக்கப்பட்டு அவரவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே சொத்து பிரிக்கப்பட்டுவிட்டது என்பதால்தான் 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் 7ம் பிரதிவாதி நிறுவனத்திடம் தன் சொத்தை அடமானமாக வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. சொத்துககள் ஏற்கனவே பிரிக்கப்பட்டு தனித்தனி அனுபவத்தில் உள்ளது என்றும், ஆனால் நான் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக பொய்யாக வழகககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை பொறுத்து என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

தாவா வழக்கு தாக்கல் செய்தவற்கு வழக்கறிஞருக்கு விளக்கம் சொன்னது யார் என்றால் நான்தான். இன்று நீதிமன்றத்திற்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் வந்துள்ளார்கள் என்றால் சரிதான். நாங்கள் நால்வரும் சேர்ந்து நீதிமன்றத்திற்கு காரில் வந்தோம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் 7ம் பிரதிவாதியிடம் கடன் வாங்கிய விவரம் பற்றி எனக்கு

தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 3ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியிடம் கடன் வாங்கியுள்ள விவரங்கள் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடன் வாங்கியபோது தெரியாது, பின்னிட்டு நான் வில்லங்கம் போட்டுப்பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன். என் தகப்பனார் இறந்த பிறகு அவருடைய சொத்துக்களை நாங்கள் பாகம் செய்து கொண்டு தனித்தனியாக இருந்து வருகிறோம் என்றால் நானும், என் அம்மாவும் தனித்தனியாக இருந்தோம். என் சகோதரர்கள் திருமணம் செய்து கொண்டு தனித்தனியாக இருந்து வந்தார்கள். எண்மனம்கொண்டான் குரூப், தர்கா வலசை கிராம சர்வே எண்.31/5ல் கண்ட 5 ½ சென்ட் நிலத்தில் நான் வீடுகட்டி குடியிருந்தேன் என்றால் நான் வீடு கட்டவில்லை, அந்த இடத்தை எனக்கு குடும்பத்தில் உள்ளவர்கள் கொடுத்தார்கள். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.162/1ஏ1ஏ, சர்வே எண்.162/4ஏ–ல் கண்ட 1 ஏக்கர் 69 சென்டு நிலத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேலேகண்ட சொத்துக்கள் குடும்பத்தில் பாகம் ஏற்படுத்திக்கொண்டபோது எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. சர்வே எண்.25/2பி சொத்தை 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் இல்லை. பாகத்தில் துரைராஜ் தனக்கு கிடைத்த ஒரு சொத்தைத்தான் எனக்கு இனாமாக கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனக்கு இனாம் கொடுத்த சொத்தும் என் அப்பா கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அதன் சர்வே எண்.25/2சி என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி ஜெயராமன் சர்வே எண்.25/2டி–ல் கண்ட சொத்தை எனக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான், 1ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்த சொத்தும் என் அப்பா கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். 14.02.2005ம் தேதி 1ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு நினைவில்லை. 14.02.2005 தேதி 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த

கிரையப்பத்திரத்தில் 20.06.1997 தேதியில் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி என் பாகத்திற்குரிய சொத்து என எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த பாகம் அவர்களாக செய்து கொண்டார்கள். அந்த பாக உடன் படிக்கை ஆவணத்தில் நானும் கையெழுத்து போட்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் இனாமாகவும், கிரையமாகவும் அடைந்த சொத்துககளையும் சேர்ந்து பாகம்கோரி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சொத்துக்கள் அனைத்தையும் சேர்க்காமல் பாகம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பகுதி பாகப்பிரிவினை என்ற அடிப்படையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண். 25/2 பி சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 18 என்றால் சரிதான். அந்த சொத்து 1997 ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டபோது 3 ம் பிரதிவாதி நாகரெத்தினத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நாகரெத்தினத்திற்கு ஒதுக்கப்பட்ட மேற்படி சொத்திற்கு பட்டா 12.08.1997 தேதியிலேயே அவர் பெயருக்கு ஏற்பட்டுவிட்டது என்றால் தெரியாது. இதுநாள்வரை வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 3 ம் பிரதிவாதி நாகரெத்தினம் பெயரில் சர்வே எண்.25/2 பி–க்குண்டான சொத்துக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.25/2–ல் 13 ஏக்கர் 8 சென்டு என் அப்பா கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். 13 ஏக்கர் 8 சென்டில் பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். 13 ஏக்கர் 8 சென்டை என் உடன் பிறந்த சகோதரர்கள் நாலுபேரும் தலா 3 ஏக்கர் 18 என பிரித்துகொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.25/2, சர்வே எண்கள்.25/2 ஏ, 25/2 பி, 25/2 சி மற்றும் 25/2 டி ஆக உட்பிரிவு செய்யப்பட்டு பட்டாக்கள் என் சகோதரர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான், அந்த விவரம் எனக்கு 2024 ம் ஆண்டுதான் தெரியும். சர்வே எண்.26/1–ல் கண்ட 4 ஏக்கர் என் சகோதரர்களுக்குள் பாகம் ஏற்பட்டு சர்வே எண்.26/1 ஏ, சர்வே எண்கள்.26/1 பி, 26/1 சி மற்றும் 26/1 டி ஆக உட்பிரிவு ஏற்பட்டு அவர்கள் பெயரில் பட்டாக்கள்

உள்ளது என்றால் சரிதான். அந்த விவரம் 2024ம் ஆண்டுதான் தெரியும். சர்வே எண்.29/1–ல் கண்ட 4 ஏக்கர் 1 சென்டு என் சகோதரர்களுக்குள் பாகம் ஏற்பட்டு சர்வே எண்.29/1ஏ, சர்வே எண்கள்.29/1பி, 29/1சி மற்றும் 29/1டி ஆக உட்பிரிவு ஏற்பட்டு அவர்கள் பெயரில் பட்டாக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த விவரம் 2024ம் ஆண்டுதான் தெரியும். என்னிடம் ஒப்படைத்த சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி நாகரெத்தினம் 7ம் பிரதிவாதியிடம் 12.03.2017ம் தேதி சர்வேஎண்.25/2பி–ல் கண்ட 3 ஏக்கர் 18 சென்டு சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 2024ம் ஆண்டில்தான் தெரியும். 3ம்பிரதிவாதி 7ம் பிரதிவாதியிடம் 11.08.2017ம் தேதி அன்று 20.06.1997 தேதியிட்ட பாகஉடன்படிக்கை ஆவணம் மற்றும் அவரது தகப்பனார் முகம்மது இப்ராகிம் என்பவரிடம் 06.08.1959 கிரையம் பெற்ற சார்பதிவாளர் நகலை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. நாகரெத்தினம் 7ம்பிரதிவாதிக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு ரஜினிகாந்ந் என்பவருக்கு அடமானகடன் பத்திரம் எழுதிக்கொடுத்து அதை மீட்டுள்ளார் என்றால் தெரியாது. அனைத்து ஆவணங்களை சரிபார்த்துத்தான் 7ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நான் மீண்டும் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாகம் ஏற்பட்டதின் அடிப்படையில்தான் 3ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு சொத்தை அடமானகடன் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது கடன் கட்டுவதிலிருந்து தப்பித்து கொள்வதற்காக என் மூலமாக பாகம் ஏற்படவில்லை என கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 3ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு கடன் கட்டுவதிலிருந்து தப்பிக்கொள்வதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பாகம் ஏற்பட்டு தனித்தனி அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், நீதிமன்ற கட்டணம் கூடுதலாக செலுத்துவதில்

இருந்து தப்பிப்பதற்காக கூட்டு அனுபவதில் இருந்து வருவதாக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. தாவா சொத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதால் காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.